# கலாதீபம்

කලාදීපම් KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.09.2024 | தீபம் 27


# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நிகழ்வு

## ஆசிரியர் பயிற்சி தகைமைச் சான்றிதழ் வழங்கல்

### மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி.ஜோன் குயின்ரஸ் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 2020 - 2021 கல்வியாண்டில் கற்றுப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியோருக்கான ஆசிரியர் பயிற்சித் தகைமைச் சான்றிதழ் வழங்கும் வைபவம் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் 10.08.2024 சனிக்கிழமை காலை 9 மணி, மு.ப. 11.30 என இரண்டு அமர்வுகளாக இனிதே நடைபெற்றது.

மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி.ஜோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு 237 ஆசிரியர்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் தகைமை பத்திரங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் முன்னாள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர்கள், ஓய்வுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் சான்றிதழ் பெறும் ஆசிரிய மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்









01.08.2024 — 31.08.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.



**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## சிலை செய்த சிற்பிக்கு கலாசாலையில் கௌரவம்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள சரஸ்வதிதேவி திருவுருவச் சிலையை இலவசமாகப் புனரமைத்துத் தீந்தை பூசிய கலாசாலையின் பழைய மாணவரும் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஆசிரியருமாகிய செகராசபிள்ளை செந்தில்வேல் கலாசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அண்மையில் (10.08.2024) இடம்பெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கும் நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி. யோன் குயின்ரஸ், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ.கருணலிங்கம், தற்போதைய அதிபர் ச.லலீசன் ஆகியோர் இவருக்கான கௌரவத்தை வழங்கினர்.

இச்சிலைக்கான புனரமைப்புப் பணிக்கான நிதி அனுசரணையை இந்த மாதம் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறவுள்ள சேவை உதவியாளர் ஐ. ரவிச்சந்திரன் வழங்கினார்.

இச்சரஸ்வதி தேவியின் திருவுருவச்சிலை சிற்பி செ.செந்தில்வேலால் அமைக்கப்பட்டு 2003 ஆம் ஆண்டில் அப்போதைய அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் தலைமையில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்து வைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.



# கலாதீபம்

KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

**கல்வித்திட்டங்களை அமுல்படுத்துவதில் ஆசிரியர்** வகுப்பறைச் சூழல் ஒவ்வொரு நாளும் புதிர் பொதிந்த ஒன்றாகும். ஒரே பாடப் பொருள் வெவ் வேறு மாணவர்களிடம் வெவ்வேறு பிரதிபலிப் பைத் தரும். புதிய புதிய வினாக்கள் மாணவர்க ளிடமிருந்து எழும்போது, புதிய புதிய கருத் துக்கள் ஆசிரியருக்கு கிடைக்கும். அதே நேரத் தில் பாடப்பொருள் மாணவர்களிடம் சேரும் விதத்தில் பலதரப்பட்ட சிக்கல்கள் எழும். ஆசிரி யர் அச்சிக்கல்களின் தன்மைகளைக் கருத்தில் கொண்டு பகுத்தறிந்து தீர்வு காண வேண்டும் பிரச்சினைகளை ஆராய்ந்து உடனுக்குடன் அச் சூழ்நிலைக்கு ஏற்ப தீர்வு காண முற்படுகையில் ஆசிரியர் ஒரு செயல் ஆய்வாளராக செயல்படு கிறார். வகுப்பறையிலோ, பாடசாலைச் சூழலிலோ அவ்வப்போது எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு முடிவு காண ஆசிரியர் எடுத்துக் கொள்ளும் முறையான விஞ்ஞான அடிப்படையிலான செயல் முறை செயலாய்வு என்பதாகும்.

அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் கல்வித் திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துதல் அனைத்து மாணவர்களுக்கும் கல்வியினை உறுதி செய்வதற்காக இலங்கையில் அவ்வப் போது பல்வேறு கல்வித் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றன. கல்வித்திட்டங்கள் யா வும் மாணவர்களை மையமாக கொண்டே திட்ட மிடப்படுகின்றன.

கல்வித் திட்டங்களும் நலத்திட்டங்களும் கல்வி மேம்பாட்டிற்காக செயற்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் மாணவர்களைச் சரிவரச் சென்ற டைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வழி காட்டியாக ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

## அரசினர் ஆசிரியர் கலாசாலைகளுக்கான இறுதிப்பரீட்சை 2021/2022(2024)

அரசினர் ஆசிரியர் கலாசாலைகளுக்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சை 26.08.2024 தொடக்கம் 31.08.2024 வரை நடைபெற்றது. விசேட பாடநெறி களுக்கான செய்முறைப் பரீட்சைகள் யாவும் 01.09.2024 அன்று நடைபெறுகிறது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 2021/2022 ஆம் அணி ஆசிரிய மாணவர்கள் 94 பேர் இப்பரீசையில் முதல் தடவையாக தோற்றியுள்ளனர். இவர்களில் ஆரம்பக்கல்வி, உடற்கல்வி ஆங்கிலம், கிறிஸ்தவம், கணிதம், தமிழ், வர்த்தகம், விசேட கல்வி ஆகிய துறைசார் ஆசிரிய மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இரண்டாம்மொழி சிங்களம் மற்றும் சில பாடநெறிகளைத் தவற விட்ட ஆசிரிய மாணவர்கள் இரண்டாவது தடவையாகவும் தோற்றியுள்ளனர் என அதிபர் தெரிவித்தார்.

## அரசினர் ஆசிரிய கலாசாலைகளுக்கான விடுமுறை

அரசினர் ஆசிரியர் கலாசாலைகளுக்கான இரண்டாம் தவணை 16.08.2024 தொடக்கம் 04.09.2024 வரை கற்றல் நடவடிக்கைக ளுக்கான விடுமுறையாக விடப்பட்டுள்ளது. அலுவலக பணிகள் வழமைபோல நடைபெறும் என அதிபர் தெரிவித்தார்.

## மழையை நிறுத்திய யோகலிங்கேஸ்வரர்

கடந்த 10.08.2024 சனிக்கிழமை கலாசாலையில் பயின்று சித்தியெய்திய ஆசிரியர்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற தகைமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஒழுங்கமை க்கப்பட்ட சூழலில் காலை 8 மணி தொடக்கம் ஆரம்பித்த கடும் மழை நிகழ்வுகள் நடைபெறாமல் தடைப்படக்கூடுமோ என ஐயுறவு கொள்ளும் அளவிற்கு பெரும்மழையாகத் தொடர்ந்தது. இந்நிலையில் கலாசாலை அதிபரும் சான்றிதழ் பெற வருகை தந்த தமிழ்நெறி ஆசிரியர் பார்த்தீபனும் இணைந்து யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கற்பூரம் ஏற்றி தேங்காய் உடைத்து வழிபாடுகளை மேற்கொண்டனர். சிறிது நேரத்தில் மழை தணிந்து இருபாலை பிரதேசமெங்கும் முற்றாக மழை விட்டது. நிகழ்வு குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகியது. அன்றைய நாள் முழுவதும் மழையின் தாக்கம் இல்லை. மறுநாள் மழை தொடர்ந்தது. யோகலிங் கேஸ்வரரின் பெருங்கருணை இதுவென பலரும் பக்தியுடன் மனம் மகிழ்ந்தனர்

# News in Brief - Month of August

## 07.08.2024
### Wednesday Assembly
was held from 8.30 am to 9.45 am under the leadership of Selvaratnam Chandrakumar, teacher student mathematics. Science teacher student I.Senthurchelvan addressed the theme of life and prosperity of Neduntheevu. This was followed by a special lecture on Sri Lanka's Executive Presidential System.

Mr K.S Ilango, famous teacher of Political Science and Principal of Island Zone, delivered the keynote address. T.Thavaseker, Senior Lecturer of Kopay Teachers' College, delivered the introductory speech of the guest.

## 10.08.2024
**The award ceremony of certificate** for the teachers school followed their teacher training at Kopay Teachers College was held on 10th of August 2024 and the leader ship of Principal Mr. Santhramouleesan Laleesan.

237 teachers obtained their certificates in two sessions. Mr. T. John Quintus the director general, Educational Publication Education Department , Ministry of Education , Isurupaja was the Chief Guest and gave the awards for the teacher.

The ceremony was formally started that in Sivan Pooja at college Sivan temple by the priest. sivasiri selvasena kurukkal.

The teachers who obtained the awards, the Principal, chief guest and other guests welcome with the traditional musical instrument thavil & nathaswaram. The National flag was hoisted by Chief guest and the college flag was hoisted by the college Principal

The prayer was held at the Rathyluxmy hall Mrs.Vijitha , Mrs. Safna & Mrs. Budthika they are sang thirukural anthem and the thamilthaai vaalthu.

Ms. T.Belini was contributed as the Anchor this event.

Mrs.Vijitha , Mrs. Safna & Mrs. Budthika they are sang thirukural anthem and the thamilthaai vaalthu The deputy principal Mr. K.Senthilkumaran delivered the welcome address

Mr. Senthilnathan renowater of the saraswathy statue of our college ,was honored by the college community. Vote of thanks delivered by Mr. T.Kobalakrishnan Deputy Principal of our college

There were 400 participants gathered in this event

## 14.08.2024
### Wednesday Assembly
**World Youth Day** Jaffna District National Youth Service Council Assistant Director Mrs. Vinothini Sirimenon gave a special speech on the role of the teacher in guiding the youth.S. Manokaran, Senior Lecturer of Kopay Teachers' College, delivered the introductory speech of the guest

## 16.08.2024
**College vacation started on 1**6.08.2024 it will be Reopen on 04.09.2024

## 31.08.2024
### College Examination - 2021/2022 (2024)
Government Teachers' College examinations Started on 26.08.2024 will finish on 01.09.2024

## 01.09.2024
### The Retirement of the Service
Mr Aiyathurai Ravichandran Service Asst. Security (Supra Grade) will celebrate his sixtieth Birthday on 02.09.2024 ( Diamond Jubilee ) His finial working day in Government Service was 30.08.2024.

The Diamond Jubilee ceremony will be held on 06.09.2024.

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை பற்றிய சிறப்புரை
## 07.08.2024 புதன் ஒன்றுகூடல்
## விருந்தினராக க.சி. இளங்கோ அவர்கள் கலந்துகொண்டார்

கலாசாலை புதன்கிழமை ஒன்றுகூடல் கணிதநெறி ஆசிரிய மாணவன் செல்வரட்ணம் சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வணக்கம், ஆசிரியர் கீதம் என்பவை இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இரகுநாதன் செந்தூர்ச்செல்வன் நெடுந்தீவின் வாழ்வும் வளமும் என்ற கருப்பொருளில் உரையாற்றினார். இவ் உரை யில் நெடுந்தீவு மக்களின் மீண்டும் ஊருக்குப் போகலாம் என்ற நிகழ்வை ஆதரிக்கும் வகையில் நடத்தப்பட்டது. நெடுந்தீவின் வரலாறு, நெடுந்தீவின் சவால்கள் சாதகங்கள் மற்றும் சுற்றுலா மையங் கள் பற்றிய கண்ணோட்டமாக இந்த உரை அமைந்திருந்தது

தொடர்ந்து இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைபற்றிய சிறப்புரை அமைந்தி ருந்தது. அரசியல் விஞ்ஞான பாட பிரபல ஆசிரி யரும் தீவகக்கல்வி வலய அதிபருமாகிய க.சி. இளங்கோ சிறப்புரை ஆற்றினார். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை பற்றிய வரலாற்றை கூறிய துடன் ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறைமை யை தெளிவுபடுத்தினார்.















# அனைத்து உலக இளையோர் தினம் 14.08.2024 புதன் ஒன்றுகூடல் விருந்தினராக யாழ் மாவட்ட தேசிய இளைஞர்சேவை மன்ற உதவிப்பணிப்பாளர் திருமதி விநோதினி சிறீமேனன் அவர்கள் கலந்துகொண்டார்

அனைத்து உலக இளையோர் நாளை சிறப்பிக்கும் நிகழ்வுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 14.08.2024 புதன் ஒன்றுகூடலின்போது இடம்பெற்றன. விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி சாயஹான் பார்த்திமா நுஸ்லா தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளையர்கள் சேவை மன்ற உதவிப் பணிப் பாளர் திருமதி விநோதினி சிறீமேனன் இளையோரை வழிப்படுத்துவதில் ஆசிரியரின் பங்கு என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாள சி.மனோகரன் அதிதி அறிமுகவுரையினை ஆற்றினார் ஆங்கிலக்கல்விநெறி ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி இளைஞர்கள் நாட்டின் மூலபலம் என்ற பொருளில் ஆசிரியமாணவர் உரையை ஆற்றினார்.

கலாசாலை அதிபர் ச.லலீசன் நிறைவுரையாற்றினார். சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட திருமதி விநோதினி சிறீமேனன கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.









# 33 வருட அரச சேவையை 01.09.2024 அன்று நிறைவுசெய்கிறார் ஐயாத்துரை ரவிச்சந்திரன்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 10.04.1991 தற்காலிக நியமனம் பெற்று 01.05.1993 இலிருந்து நிரந்தர நியமனமாக சேவை உதவியாளர் பாதுகாப்பு (விசேட தரம்) பெற்று 01.09.2024 உடன் தனது 33 வருட அரச சேவையை நிறைவு செய்து ஓய்வு பெறுகிறார் திரு ஐ.ரவிச்சந்திரன்.

கலம்பரைக் குறிச்சி கோப்பாய் வடக்கினில் ஐயாத்துரை தங்கமுத்து தம்பதியரின் மகனாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வி இடைநிலைக் கல்வி என்பவற்றை நிறைவுசெய்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தனது சேவையினை 10.04.1991 அன்று பெற்றுக் கொண்டார். அன்றிலிருந்து பணி ஓய்வு பெறும்வரை அனைவரது உள்ளங்களையும் வென்று சேவையினை மிகவும் உயரிய கண்ணியத்தோடு ஆற்றிய பெருமைக்குரியவர்.

நூற்றாண்டுவிழாக் காலப்பகுதியில் கலாசாலை நிகழ்வுகளில் மிகவும் காத்திரமான பங்களிப்பு நல்கிய திரைமறைவு ஆளணியினரில் இவரது பங்கு அளப்பரியது.

காலையில் அலுவலகத்தில் கையெழுத்திடும்போது வாழ்த்துக் கூறி வரவேற்கும் அவரது சிரித்தமுகம் அன்றைய நாளை மலர்ச்சியுறச் செய்துவிடும். **ரவி அண்ணா** என்ற அழைப்பிற்கு எங்கிருந்தாலும் **ஓம் வாறன்** என்ற குரல் ஒலிக்கும் கலாசாலை அலுவலகம். எவ்வளவு மனதாங்கல் ஏற்பட்டாலும் அதைவெளிக்காட்டாத சிரிப்பு. கோபம் வந்தால் ஒரு சில நிமிடங்கள் அதன் பின்னர் வழமையான சுறுசுறுப்பு. எதற்குமே மறுப்பு கூறாத பண்பு. இத்தகைய சிறந்த பண்பாளர் ஓய்வு பெறுவது கலாசாலையின் பணியில் சிறு இடைவெளி இருப்பினும் தங்கள் ஓய்வுக் காலம் சிறக்க கலாசாலையில் அமர்ந்தருளும் யோகலிங்கேஸ்வரப் பொருமானை வேண்டி கலாசாலை சமூகத்தினர் சார்பில் வாழ்த்துகிறோம்.

**வாழ்க வளமுடன்.**



**திரு ஐயாத்துரை ரவிச்சந்திரன்**
**சேவை உதவியாளர் பாதுகாப்பு (விசேட தரம்)**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

| | | |
|---|---|---|
| **பிறப்பு** | - | 02.09.1964 |
| **பிறப்பிடம்** | - | கலம்பரைக் குறிச்சி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் |
| **வசிப்பிடம்** | - | நாயன்மார்கட்டு |
| **தந்தையார்** | - | திரு.கா.ஐயாத்துரை |
| **தாயார்** | - | திருமதி.தங்கமுத்து .ஐயாத்துரை |
| **மனைவி** | - | திருமதி கலைவாணி ரவிச்சந்திரன் (மேற்பார்வையாளர்(ஓவசியர்), போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) |
| **ஆரம்பக்கல்வி** | - | யா/ கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம் |
| **இடைநிலைக்கல்வி** | - | யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி |

**தொகுப்பு**
தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர் (SLTES)
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

# திரு ஐ.ரவிச்சந்திரன் மணிவிழா வாழ்த்து

## நம்பிக்கையின் மறுபெயர் ரவி அண்ணா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 30 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக சேவை உதவியாளராக பணி ஆற்றிய திரு. ஐ. ரவிச்சந்திரன் அவர்கள் சேவையில் இருந்து இளைப்பாறுகை பெறுவது குறித்து எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

பொதுவாக வாழ்த்துச்செய்திகளை வழங்குவது மனதுக்கு மகிழ்ச்சி தருவது. ஆயினும் ரவி அண்ணருக்கான இந்தச்செய்தி மனதுக்கு சற்று நெருடலையும் தருகிறது. அதிபர் அலுவலகத்தின் மிகவும் நம்பிக்கைக்குரிய சேவை உதவியாளராக திரு. ஐ. ரவிச்சந்திரன் அவர்கள் விளங்கினார். என்னுடன் மாத்திரம் அல்ல எனக்கு முன் இருந்த அதிபர்களான திரு. வீ.கருணலிங்கம் ஆயினும் சரி திரு வே.கா.கணபதிப்பிள்ளை ஆயினும் சரி ரவிச்சந்திரனிடம் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர்.

அலுவலகத்தின் முழு திறப்புகளையும் கையாளும் ஒரே நபராக திரு. ஐ.ரவிச்சந்திரன் அவர்களே விளங்கினார். இவரைப்போல இனி யார் இவ்வாறு விசுவாசமாக சேவையாற்றப்போகிறார்கள் என்பதை நினைத்தே நான் நெருடல் என்று குறிப்பிட்டேன்.

திரு. ரவிச்சந்திரன் அவர்கள் கலாசாலையின் பல அதிபர்களுடன் சேவையாற்றி உள்ளார். வை.கா. சிவப்பிரகாசம் எனப்படும் வைகாசியில் இருந்து என்னுடைய காலம் வரை அவருடைய சேவை சிறப்புற்று இருந்தது.

அவரிடம் இருக்கின்ற மிகப்பெரும் சிறப்பு ஒருவருடைய கதை யை இன்னொருவருக்குக்கூறாமல் அலுவலகத்தின் மாண்பினை காப்பாற்றி நிற்பது என்றால் மிகைப்படாது. தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை விட மேலதிக வேலைகளை தாமாகவே முன் வந்து செய்யும் உள்ளம் படைத்தவர் திரு. ஐ.ரவிச்சந்திரன் ஆவார்.



**சந்திரமௌலீசன் லலீசன்**
**அதிபர்**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

இதனால் அதிபர் மாத்திரம் அல்ல கலாசாலையின் விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், சக அலுவலர்கள் என எல்லோரின் மனங்களிலும் திரு. ஐ ரவிச்சந்திரன் தனி இடம் பிடித்தார்.

ரவிஅண்ணரின் ஓய்வு அரசபணியில் இருந்தானது இருப்பினும் அவர் கலாசாலையுடன் என்னாளும் அவருடைய உறவைப்பேண வேண்டும். அவரது முன் மாதிரியான செயய்பாடுகள் இளைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ஒரு “பாடம்“ என்றால் மிகைப்படாது.






# திரு ஐ.ரவிச்சந்திரன் மணிவிழா வாழ்த்து



**வே.கா.கணபதிப்பிள்ளை**
**ஓய்வுநிலை அதிபர்**
**கோப்பாய் ஆசிரியர்**
**கலாசாலை**



**வீ.கருணலிங்கம்**
**ஓய்வுநிலை அதிபர்**
**கோப்பாய் ஆசிரியர்**
**கலாசாலை**

## மனசாட்சியின் நம்பிக்கையாளர் தம்பி ரவி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடமைபுரியும் கல்விசாராப் பணித்தொகுதியில் எல்லோர் மனங்களிலும் எண்ணங்களிலும் உண்மையானவர் நம்பிக்கைக்குரியவர் விசுவாசி எனப் போற்றப்படும் தம்பி ஐயாத்துரை ரவிச்சந்திரன் சுமார் 32 வருட ங்களுக்கு மேலாக நற்பணியாற்றி அறுபது வயதை அடைந்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் செய்தி யறிந்து முன்னாள் அதிபர் என்ற வகையில் அவர து அர்ப்பணிப்பான சேவைகளைப் பாராட்டி மகிழ் ந்திட வேண்டிய கடமைப்பாட்டில் உள்ளேன்.

கலாசாலைக் கல்விப்புலத்தில் கல்விசார் சமூ கத்துக்கும் ஆசிரிய மாணவர்கள் கல்விசாராப் பணி குழுவினர் போன்ற யாவர்க்கும் இன்முகம் காட்டி பலனை எதிர்பாராது என்றுமே சிரித்த மனத்தோடு கடமையாற்றி எல்லோருக்கும் ஓர் உதாரண புருஷ ராக இருந்துள்ளார். கோப்பாய் வடக்கில் நல்ல உயர் குடும்பத்தில் பிறந்து நாயன்மார்கட்டுப் பகுதியில் திருமணம் பூண்டு சிறப்பான வாழ்க்கை வாழ்ந்த பெருமகன் ஆவார்.

எனது கடமைக் காலத்தில் எதைக் கேட்டாலும் புன்முறுவலுடன் ஏற்று மனச்சாட்சியை எனக்கு தட் டிக்காட்டிய அரியவர். அவர் எதிர்காலம் ஒளி மயமாக அமைய நல்லூர்க் கந்தன் அருள் கிடைக் க பிரார்த்தித்துக் கொள்வதுடன் நீண்ட காலம் நோய் நொடியின்றி நலவாழ்வு வாழ வாழ்த்திக் கொள்கிறேன்.

## முன்னாள் அதிபரின் உள்ளத்திலிருந்து

நூற்றாண்டு விழாக்கண்டு எழில் மணம் வீசும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்பித்தல் சாரா பாதுகாப்பு உத்தியோகத்தகராக கடமை ஆற்றி ஓய்வு பெறும் திருவாளர் ஐயாத்துரை ரவிச் சந்திரன் அவர்களின் பணிநயந்து வாழ்த்து வழங்கு வதில் பெரும் மகிழ்வடைகின்றேன். ஏறத்தாள 35 ஆண்டுகள் பணியாற்றி சகலருடைய மனங்களிலும் நிறைந்து வாழ்கின்ற பெருமையைப் பெற்றவர் மணிவிழா நாயகன். யாழ்ப்பாணத்தில் கடந் த இரண்டு தசாப்தங்களில் பல் வேறு இன்னல் களிற்கும் சலிப்படையாது சவால்களை எல்லாம் தாண்டி நிற்கின்ற கோப்பாய் ஆசிரியர் கலாசா லையின் உற்ற தோழனாகவும் அன்னையின் காவலனாகவும் பணியாற்றி கலாசாலையின் வரலாற்றுப் பதிவுகளிலே இடம் பெறுகின்ற ஓர் ஆவணப் பெறுமதி மிக்க சேவையாளனாக மணிவிழா நாயகனை நேசிக்கின்றேன்.

யான் ஏறத்தாள 21 வருடங்களில் 8½ வருடங்கள் அதிபராக கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. நிரந்தர அலுவலக உத்தியோகத்தர் இல்லாத காரணத்தினால் எல்லோர் உள்ளத்திலும் நம்பிக் கை நட்சத்திரமாக திகழ்ந்தவர் மணிவிழா நாயகன் ஐயாத்துரை ரவிச்சந்திரன் அவர்கள். அந்த வகையில் அலுவலக உத்தியோகத்தவராக கடமை யாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டதனால் நீதி, நேர்மை, பணிவடக்கம், பொறுமை, எல்லோரையும் மதிக்கும் பண்பு, அலுவலக பணிகளில் திறன்

# திரு ஐ.ரவிச்சந்திரன் மணிவிழா வாழ்த்து

மேம்பாடு என்ற வகையில் நம்பிக்கைக்குரிய உத்தியோகத்தராக செயல்பட்டார்.

எவரோடும் இதயபூர்வமாக அன்பாக பொறுமை-யோடு கேட்டுச் செயற்படும் உள்ளம் கொண்டவர். நிர்வாக அதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்களது கட்டளைகளைச் செவிமெடுத்து நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவர் விழா நாயகன். நிர்வாக அதிகாரிகளானாலும் சரி, ஏனைய விரிவுரையாளர்களாக இருந்தாலும் சரி கல்விசாரா பணியாளராக இருந்தாலும் சரி எந்த வேறுபாடும் காட்டாது தன்னடக்கமாக, பொறுமை-யோடும் அன்போடும் தமது அலுவலக கடமையில் பயணித்தவர் இன்றைய விழா நாயகன்.

நாளொன்றுக்கு 12 மணித்தியாலத்தை விட அதிகமாக பணியாற்றி வந்த ரவி என அன்பாக அழைக்கப்பட்ட ரவி அண்ணாவை ஒரு தெய்வீகப் பிறப்பாக நான் எண்ணுகிறேன். வீட்டுச் சிந்தனை எல்லாவற்றையும் மறந்து கலாசாலையே தம் வாழ்விடம் என்று திறம்பட பணியாற்றியவர். அண்மையில் சில ஆண்டுகள் பல்வேறு பட்ட இன்ன ல்களை கலாசாலை சந்தித்த வேளையிலும் முழு மூச்சாக நின்று அலுவலக பொறுப் புக்களை பக்தியோடு பேணிவந்த பெருந்தகையாளன் ஓய்வு நேரங்களிலும் கூட அதிபர், விரிவுரையாளர்கள் கலாசாலையில் ஒரு விடயத்தை பெற்றுக் கொள்ள வேண்டி இருந் தாலும் தொலைபேசி அழைப்பு எடுத்தவுடன் விழுந்தடித்து சில நிமிடங்களில் கலாசாலைக்கு சில நிமிடங்களில் வருகை தந்து அவரவர் தேவைகளை நிறைவேற்றி வைப்பவர் இவ்விழா நாயகன்.

சிற்றுண்டிச்சாலை வசதிகள் அற்ற நேரத்தில் அலுவலக கடமைக்கு அப்பால் தண்ணீர்த்தாகம் தீர்க்கும் வல்லவனாய் அனைவருக்கும் இன்முகத்தோடு தேநீர் வழங்கி உபசரிக்கின்ற ஒரு கொடையாளியாகப் பார்த்திரு க்கின்றேன்.

ஒரு பரந்த மனப்பாங்கில் எழும் அன்பே மிகச்சிறந்தது என்பதனை இவரது கலாசாலை வாழ்வில் கண்டுள்ளேன். அன்பான மனிதநேயம் கொண்ட இவரது உள்ளத்தில் ஒரு விசித்திரப் படைப்பானது இருக்கின்றது. இதன் எண்ண ஊற்றுக்கள் எண்ணில் அடங்காதவை. வாடிய பயிருக்கு வான் மழை கிடைப்பது போல ரவி அண்ணனின் அன்பால் களைத்து வரும் பணியாளருக்கு தேநீர் வழங்கி மகிழ்வதை கண் கூடாகப் பார்த்திருக்கின்றேன்.

அன்பு வழி எவ்வளவு இனிமையான வழி, இவ் வழியைக் கடைப்பிடித்து எல்லோ ருடனும் அன்புடன் வாழ்ந்து காட்டியமையால் மனித வாழ்வு மணம் கமழும் வாழ்வாக ஓய்வுக் காலத்திலும் மலரும் என்பதும் எனது நம்பிக்கை.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாயகனது மைனயாள் ஒரு பாக்கியசாலியாக கிடைத் திருப்பது இவரது பணி வெற்றிக்கு காரணமா கிறது. பொறுமையைக் கடைப்பிடித்து நேரம் காலம் பார்க்காது, சினுங்கல், சீறல் இல்லாமல் ஒத்து இயங்குகின்ற அரச பணியாளராக இருந்து உறவாடிய மனைவியின் ஒத்துழைப்பே எல்லா வற்றிற்கும் மேலாக விளங்குகிறது. ஈகவே நீங்கள் இருவரும் ஒத்த அன்பினால் ஓய்வுக் காலத்திலும் மகிழ்ச்சியோடு பயணித்து சமூ கமேம்பாட்டிற்கு பங்களிப்பதோடு எது வித நோய் நொடிகள் இன்றி சீரோடும் சிறப்போடும் வாழ நயினை நாகபூசணி அம்பிகையின் கடாப்சம் தங்கள் மேல் அருள் பாலிக்க வேண்டி இறை ஆசியோடு மனம் மகிழ வாழ்த்துகிறோம்.

# திரு ஐ.ரவிச்சந்திரன் மணிவிழா வாழ்த்து



க.செந்தில்குமரன்
பிரதி அதிபர்
(நிதி நிர்வாகம்)
தலைவர்,
விரிவுரையாளர் கழகம்.
கோப்பாய் ஆசிரியர்
கலாசாலை

ஆசிரியர் கல்விப் பணியில் நூற்றாண்டைக் கடந்து வீறுநடைபோடும் ஆசிரியர் கலாசாலைக் கெல்லாம் மூத்த கலாசாலையாம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகாலமாய் அளப்பரிய சேவையாற்றி செப்டம்பர் மாதம் முதலாம் நாள் ஓய்வு பெறும் எங்கள் எல்லோரினதும் அன்புக்குரிய ரவி அண்ணாவுக்கு வாழ்த்து சொல்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை வரலாற்றில் ரவி அண்ணாவுக்கு சிறப்பான பக்கங்கள் நிச்சயம் உண்டு. கடமை உணர்வு, ஏற்ற பொறுப்புக்களை செவ்வனே செய்து முடித்தல், நேர்மை, கடின உழைப்பு, நேர முகாமைத்துவம், நிறுவனப்பற்று, பொறுமை, நம்பிக்கை என ஒரு நல்ல மனிதருக்கு இருக்க வேண்டிய அனைத்துப் பண்புகளையும் கொண்டவர் எங்கள் ரவி அண்ணா.

ரவி அண்ணா எல்லோருடனும் அன்பாக பழகுவார். கலாசாலையின் ஒவ்வொரு இடத்தையும் ஒவ்வொரு மனிதரையும் ஆழமாக அறிந்தவர். இவரை யாரும் ஏமாற்ற முடியாது. அதிகம் கதைக்க மாட்டார். ஒரு புன்சிரிப்பு பல கதைகளைச் சொல்லும். சிறந்த மனவெழுச்சி முகாமையாளர். சமநிலை ஆளுமை-மிக்கவர்.

ரவி அண்ணா ஒரு பல்துறை ஆற்றலாளர். கலாசாலையில் ரவி அண்ணா இல்லாமல் எந்த வேலையும் முழுமை பெறாது. இவரது வகிபாகங்கள் சொல்லி முடியாது. முச்சக்கர வண்டி சார-தியாக, காவலாளியாக, அலுவலக உதவியாளராக, நிழல்ப்பிரதி எடுப்பவராக, தேநீர் தயாரிப்பவராக, ஒலி அமைப்பாளராக, பொருட்களைப் பாதுகாப்பவராக என இவரது வகிபாகங்கள் நீண்டு செல்லும்.

கலாசாலைக்கு முதலில் வந்து கடைசியாகப் போகும் அலுவலகப்பணியாளர் இவர்தான். நான் இவருடன் சேவையாற்றிய காலம் மிக மகிழ்வானது. இவர் லீவு எடுப்பதில்லை. நாம் வற்புறுத்தித் தான் ஒரு சில நாட்கள் அவரை சொந்த வேலை செய்ய அனுப்பினோம். அவ்வளவுக்கு கடமை தப்பாதவர்.

ரவி அண்ணா ஓய்வு பெற்றபின் கலாசாலை அலுவலகத்தில் நிரப்ப முடியாத வெற்றிடம் தோன்றும் என்பது மறுக்க முடியாத உண்மை. அடிக்கடி ரவி அண்ணாவுக்கு தொலைபேசி எடுத்து பல விடயங்களை கேட்க வேண்டி வரும்.

ரவி அண்ணாவின் ஓய்வு காலம் சிறக்கவும் அவர் குடுப்பத்துடன் பல்லாண்டுகாலம் நோய் நொடியின்றி வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழத்துகிறேன்.



# திரு ஐ.ரவிச்சந்திரன் மணிவிழா வாழ்த்து



**த.கோபாலகிருஷ்ணன்**
**பிரதி அதிபர்**
**(கல்வி அபிவிருத்தி)**
**கோப்பாய் ஆசிரியர்**
**கலாசாலை**

எமது கலாசாலையில்.10.04.1991 இலிருந்து கடமையாற்றி 01.09.2024 அன்று பணி ஓய்வு காணும் கற்பித்தல் சாரா உத்தியோகத்தர் ஐ.ரவிச்சந்திரன் (ரவி அண்ணா) அவர்களின் சேவையை வாழ்த்தி கலாசாலையின் கல்வி அபிவிருத்தி பிரதிஅதிபர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடந்த 33 வருடங்களாக திருவாளர் ஐ.ரவிச்சந்திரன் அவர்கள் கற்பி த்தல்சாரா உத்தியோகத்தராக கடமையாற்றி வருகிறார். இந்தப்பேறு எவருக்கும் இலகுவில் கிடைத்துவிட கூடியது ஒன்றல்ல. பாதுகாப்பு உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர் தனது கடமை கண்ணியம், பணிவு, நேரந்தவறாமை போன்ற பண்பு களால் பல அதிபர்களின் பாராட்டைப் பெற்றவர். இவரது சிறப்புக்களைக் கண்ட முன்னாள் அதிபர் திரு.வீ.கருண லிங்கம் அவர்கள் இவரை அலுவலக உத்தியோகத்தவராக்கி கௌரவப்படுத்தினார். அன்று முதல் இன்றுவரை அக்கடமை யை சிறப்பாக ஆற்றியுள்ளார்.

இதே போல பிரதி அதிபர்களாகிய எம்முடன் நல்லுறவைப் பேணி எமக்கு வேண்டிய உதவிகளை மனம் கோணாது செய்து தருவார். கடமைக்கு அப்பால் இவரிடம் பல்வேறுபட்ட திறமைகளும் இருந்தன.

முச்சக்கரவண்டிச் சாரதியாக, போட்டோகொப்பி பிரதி எடுப்பவராக, தேநீர் போட்டுத் தருபவராக என இவரது செயற்பாடுகள் பல்துறைப்பட்டதாக அமைந்து கலாசாலை முகாமைத்துவத்திற்கும், விரிவுரையாளர்களுக்கும் பேருதவி யாக அமைந்தது. இதனைவிட அலுவலகத்திலுள்ள பொருட் கள் உபகரணங்களை உரிய முறையில் சீராகப் பேணுவதில், பாதுகாப்பதில் வல்ல வராகவும் இருந்தார். எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதில் வல்லவர். இதனால் எல்லோரும் இவரை 'ரவி அண்ணா' என அன்போடு அழை ப்பர். அனுபவப் பெட்டகமான இவரது பணி ஓய்வு எமது கலாசா லைக்கு மிகப்பெரிய இடை வெளியை ஏற்படுத்தும். இவ் வகையில் பணிச் சிறப்பு க்கள் பல கொண்ட இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைந்து நல்லாரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றேன்.



**திருமதி சத்தியா ரஞ்சிற்**
**உப அதிபர்**
**கோப்பாய் ஆசிரியர்**
**கலாசாலை**

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் மிக நீண்ட காலம் கற்பித்தல்சாரா உத்தியோகத்தராகப் பணியாற்றி எதிர்வரும் 01.08.2024 முதல் பணி ஓய்வு காணும் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திருவாளர் ஐயாத்துரை ரவிச்சந்திரன் (ரவி அண்ணை) அவர்களின் பணிநயப்பினை சிறப்பிக்கும் வகையில் எமது கலாசாலையின் மின்இதழாகிய கலாதீபத்தில் மலரும் இச் சிறப்பிதழில் அவரது சேவையை வாழத்திக் கிடைத்தமையை இட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பலாலி ஆசிரிய கலாசாலையில் இருந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வந்த காலம் முதல் ரவி அண்ணையை நன்கறிவேன். இவர் காவலாளியாக இக் கலாசாலையில் 17.06.1993 இல் தன் பணியை தொடங்கி அவர் தன் பணிச்சிறப்பால் எல்லோ ரது இதயங்களையும் வென்று இன்று அலுவலக கடமைகளையும் செய்கின்ற சிற்றூழியராக பணி யாற்றுகிறார். இது எல்ரோருடனும் நேசமுடன் பழகும் அவரது பண்பு காரணமாகவும் கடமையுணர்ச்சி பணிவு காரணமாகவும் அவருக்கு கிடைத்தது என்றால் அது மிகையல்ல. இவரது சகோதரர் ஞானி அண்னை அவர்களும் இங்கு நீண்டகாலம் நூலக உதவியாளராக விளங்கியவர். காவலாளி நிலையம் அதிபர் அலுவ-லகம் வரை நடமாடும் கடமைபுரியும் பணியாளர் ரவி அண்ணை என்றால் அதற்கு நிகர் வேறொருவரும் இல்லை. தேவையான உபகரணத்தையோ அல்லது ஏதாவது ஒரு விடயத்தையோ அறிய வேண்டும் என்றால் எல்லோரது வாயிலும் "ரவி அண்ணை எங்கே" என்ற கேள்வியே ஒலிக்கும்.

கலாசாலைக்கு எல்லோரும் வரமுதல் வருவார் எல்லோரும் சென்ற பின்பே வீடு செல்வார் கலாசாலை தான் அவரது முதல் மனைவி என்றால் மிகையாகாது. செய்யும் தொழிலே தெய்வம்

# திரு ஐ.ரவிச்சந்திரன் மணிவிழா வாழ்த்து

என்பதற்கு இலக்கணமானவர் எல்லோருடனும் வேறுபாடுகள் இன்றி நல்லுறவு கொண்டு பழகிடுவார்.

எமது தேவைகளை மனம் கோணாது நிறைவேற்றித் தருவார். கலாசாலையில் தேநீர் போட்டுத் தந்து பலரது தாகத்தை தீர்ப்பவரும் அவரே. ஒரு ஆப த்து அவசரம் என்றால் கலாசாலையில் ஓட்டோவை ஓட்டிச் செல்பவரும் அவரே. இவ்வாறு ஒரு சிற்றூ ழியர் என்ற கடமைக்கு அப்பால் பல்துறை ஆற்றல் மிக்கவராக நாம் அவரை அவரது சேவையை கண்டு வியந்திருக்கிறோம். இத்தகைய ஒருவரின் பணி ஓய்வு என்பது எமது கலாசாலையை பொறுத் தவரை பெரிய வெற்றிடமாகும். அவர் ஆற்றிவிட்டுப் போகும் பணிகளுக்கு நன்றி சொல்வதுடன் அவரது ஓய்வு காலத்தில் நல் ஆரோக்கியத்துடன் குடும்ப உறவுகளின் உயர்வுகள் கண்டு சிறப்போடு வாழ எல்லாம் வல்ல யோகாம்பிகை சமேத யோகலிங்கேஸ்வரப் பெருமானை வளங்கி இவ் வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.





**திருமதி நிஷந்தி பிரதீபன்**
**பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்**
**(MSO - I)**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

கோப்பாய் ஆசிரிய கலாசாலைலையின் அனுபவ த்தின் மூத்த கற்பித்தற் சாரா உத்தியோகத்தரான ரவி அண்ணா என்று நாம் அன்போடு அழைக்கும் திரு ஐ ரவிச்சந்திரன் அவர்கள் பணி ஓய்வு பெறுவதை முன்னிட்டு கலாதீபத்தில் வெளியாகும் இப்பணி நயப்பு சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் சக கற்பித்தல் சாரா பணியாளராக பெருமையடைகின்றேன்.

ஒரு அலுவலக உதவியாளர் என்ற கடமைப் பொறுப்புக்கும் அப்பால் அவர் எமக்குச் செய்த உதவிகளை நாம் என்றும் மறக்க முடியாது. அவ் வகையில் அவர் செய்த அத்தனை உதவி களுக்கும் நன்றி என்ற ஒற்றை வார்த்தை சொல்லி கடக்க முடியாது என்றே எண்ணத் தோன்றுகின்றது. சக பணியாளராய் அவரி டமிருந்து நாம் கற்றுக் கொண்டவை பல. பலாலி ஆசிரிய கலாசா லையில் இருந்து இக்கலாசா லைக்கு வந்த காலத்தில் இருந்து இன்றுவரை அவரோடு பணியாற்றக் கிடைத்த காலங்கள் என்றும் மறக்க முடியாதவை. தேவையறிந்து சேவை செய்தல் அன்பினால் சேவை செய்தல் என்பவற்றிற்கு இலக்கணமாக விளங்கியவர் இவர்.

கலாசாலையின் தனது நீண்ட கால சேவையில் இருந்து ஓய்வு பெறும் அவரது ஓய்வுகாலமும் சிறப்புற்று விளங்க எல்லாம் வல்ல யோகலிங் கேஸ்வர பாதம் பணிந்து பணிநயப்பு வாழ்த்துக் கூறி இவ்வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

# திரு ஐ.ரவிச்சந்திரன் மணிவிழா வாழ்த்து

## பணிநயந்து போற்றுகின்றோம்

ரவி அண்ணை
இந்த நாமம்
ஒலிக்காத
கலாசாலை நாட்கள்
கிடையாது.
பண்பு தான்
ஒருவனை
மனிதனாக்கும்
என்பதற்கு
நாம் கண்ட
உதாரணம் இவர்
ஒரு சிற்றூழியர்
இப்படியும்
இருக்கமுடியுமா? என
எம்மை
வியக்க வைப்பதாய்
அவர் செயல்கள்
பேதமின்றி
எல்லோருடனும்
அன்பு கொண்டு
பழகிடுவார்
கடமைக்கு
அப்பாலும் கடமை
செய்வார்
கோபம் வந்து
நாம் கண்டதில்லை
அலுவலகத்தில்
அலுவலக கடமை

அதுபோக
இடைவேளையில்
எம் தாகம்
தீர்க்கும் கடமை
எல்லோரும் வர
முன்னர்
கலாசாலைக்கு
வருவார்
எல்லோரும்
சென்ற பின்பே
கலாசாலையை
விட்டுச் செல்வார்
எத்தனை கால
அனுபவம்
எத்தனை பேரை
கண்ட பணிநயம்
இன்று பிரியா
விடை கொள்கிறதே
என்று எண்ணுகையில்
கண்கள் பணிக்கிறது
இதயம் அழுகிறது
இனி உங்களைப் போல
யார் வருவார் என்ற
ஒற்றை
வார்த்தைக்குள்
எல்லாருமே
அடங்கிவிடுகிறது
அனுபவப் பெட்டகமே

பணிவின் இருப்பிடமே
பணிநயந்து உமக்கு
விடை தந்தோம்
பிணி
இன்றிப்
பல்லாண்டு வாழ
யோகலிங்கேஸ்வரர்
பதம் பணிந்து
போற்றுகின்றோம் நாமே



கவிநய வாழ்த்துடன்

வேல் நந்தகுமார்
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை



# முன்னாள் பிரதி அதிபர் சங்கீத பூஷணம் குமாரசாமியின் திருவுருவச்சிலை உடுப்பிட்டியில் திறந்துவைப்பு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபரும் விரிவுரையாளருமாகிய சங்கீத பூஷணம் அமரர் செல்லத்துரை குமாரசாமியின் முதலாம் ஆண்டு நினைவு தினமும் அவரது திரு உருவச்சிலை திறப்பு விழாவும் கடந்த 03.08.2024 சனிக்கிழமை காலை அன் னாரது மகளின் இல்ல முகப்பில் (பிருந்தாவ னம் சந்நிதி வீதி உடுப் பிட்டி) இடம் பெற்றது.

முன்னாள் அதிபர் வே. கா. கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கலாசாலைச் சமூகம் சார்பில் கலாசாலை அதிபர் ச. லலீசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அமரர் குறித்த நினைவுப் பேருரையை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆற்றினார்.

கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர். பண்டிதர். கலாநிதி. சி திருநாவுக்கரசு, முன்னாள் விரிவுரையாளர் வி. எஸ். குணசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். சிலையை நிகழ்வின் பிரதம விருந்தி னராக கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் திறந்து வைத்தார்













# கலாசாலையில் கவிதை மற்றும் சிறுகதை நூல்கள் வெளியீடு

கலாசாலையின் அயலவரும் நோர்வே எழுத்தாளருமாகிய தெய்வானந்தி சதாசிவம் எழுதிய காக்கைச் சிறகினிலே என்ற கவிதைத் தொகுதி மற்றும் பாரதி கண்ணம்மா என்ற சிறுகதைத் தொகுதி நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் சைவசமய பாடத்திற்கான ஓய்வுபெற்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பாலசரோஜா பாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ. பத்மநாதனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஆசியுரையை இருபாலை கற்ப கப்பிள்ளையார் மற்றும் கலாசாலைச் சிவன் ஆலயங்களின் பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்களும் அறிமுக வுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவாணி சண்முகதாசும் நயப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலா சாலை விரிவுரையாளர் கவிஞர் வேல்.நந்தகுமாரும் மேற் கொண்டனர்.













